Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 307

செவ்வாய்க்கிழமை
30 செப்ரெம்பர் 2025

புரட்டாதி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## குளவி கொட்டி 6 மாணவர்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, செப்.30
பாடசாலைக்குப் பயணித்துக் கொண்டிருந்த 6 மாணவர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகி, தர்மபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் விசுவமடு 12ஆம் கட்டை தபால்நிலைய வீதியில் நேற்று நடந்துள்ளது. இராணுவத்தினரின் பண்ணையில் இருந்த குளவிக்கூடு கலைந்து மாணவர்களைத் 11

# காற்றாலைக்கு எதிராக அணிதிரண்டது மன்னார்

ஆயிரக் கணக்கில் மக்கள் பங்கேற்பு

முழு அடைப்புப் போராட்டமும் வெற்றி

போராட்டத்தில் பொலிஸாருடன் முறுகல்

கலகமடக்கும் பொலிஸார் களத்தில்



மன்னார், செப்ரெம்பர் 30
மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலைத் திட்டத்துக்கு எதிராகவும், காற்றாலைக்கு எதிராகப் போராடிய பொதுமக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்தும், ஆயிரக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் நேற்று மிகப்பெரிய போராட்டமும், கடையடைப்பும் இடம்பெற்றன. 11

கிளிநொச்சியில்

## வெடித்துச் சிதறியது குண்டு; இருவர் அவசர சிகிச்சையில்

வெடிக்காத குண்டை கையாண்டபோது விபரீதம்

கிளிநொச்சி, செப். 30
கிளிநொச்சி - தட்டுவன்கொட்டி பகுதியில், வெடிகுண்டு ஒன்றை கழற்ற முற்பட்டபோது அது வெடித்துச் சிதறியதில் இருவர் படுகாயமடைந்தனர். 11

செம்மணியில்

## உணவுத் தவிர்ப்புப் போரில் முஸ்லிம் உறவுகளும் பங்கேற்பு



யாழ்ப்பாணம், செப். 30
தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேசத்திடம் நீதிகோரி, செம்மணியில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் நேற்று முஸ்லிம் உறவுகளும் கலந்துகொண்டனர்.
போராட்டத்தின் ஐந்தாவது நாளான நேற்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், 11

## பல்கலைக்கழக ஆசிரியர்கள் இன்று வேலைநிறுத்தப் போர்

யாழ்ப்பாணம், செப். 30
அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் இன்று அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர். ஊதிய உயர்வு உள்ளிட்ட, பல்வேறு கோரிக்கை 11

மணல் கடத்தல் முறியடிப்பு

## பளை - சோரன்பற்று வீதியில் குவியல் குவியலாக மணல்

கிளிநொச்சி, செப். 30
பளை சோரன்பற்றுப் பகுதியில், மணல் கடத்தலில் ஈடுபட்ட நபர்களை பொலிஸார் விரட்டியபோது, அவர்கள் வீதியில் மணலைக் கொட்டிவிட்டு டிப்பருடன் 11



நெடுந்தீவில் எரிபொருள் நிரப்பு நிலையம்
விரிவு பக்:- 04

முச்சந்தி முரளி

'மாற்றம் என்டு சொல்லி ஏமாற்றத்தை தந்தவைக்கு மன்னார் தான் முடிவுகட்டப்போகுதோ தெரியேலை'

பருத்தித்துறை பிரதேசசபையில்

## தவிசாளர் மீது குற்றச்சாட்டு உறுப்பினர்கள் வெளிநடப்பு!

யாழ்ப்பாணம், செப். 30
பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் தன்னிச்சையாகச் செயற்படுகின்றார் என்று குற்றஞ்சாட்டி 50 வீதமான உறுப்பினர்கள் நேற்று வெளிநடப்புச் செய்துள்ளனர்.
பருத்தித்துறை பிரதேசசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது, கடந்த மாதத்தின் கூட்ட அறிக்கையில் தாம் சுட்டிக்காட்டிய விடயங்கள் இடம்பெறவில்லை என்று 11

## அர்ச்சுனா எம்.பி. நேற்றுக் கைது

கொழும்பு, செப். 30
நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, பொலிஸா 11

## கண்டாவளையில் மணல் கடத்தல்; டிப்பரைக் கைப்பற்றினர் பொலிஸார்!

சாரதி தப்பியோட்டம்



கிளிநொச்சி, செப். 20
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில், மணல் கடத்தலுக்குப் 11

## புலிகளின் தங்கத்தை மீட்கும் முயற்சி தோல்வி

மட்டக்களப்பு, செப். 30
மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள, புளியடிமடு காயங்குடாப் பகுதியில், விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மற்றும் தங்கத்தைத் தேடி, நேற்று மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கைகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன.
விசேட அதிரடிப் படையினருக்கு 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 29.09.2025 | திகதி 29.09.2025 | திகதி 29.09.2025 | திகதி 29.09.2025 | திகதி 29.09.2025 | திகதி 29.09.2025 | திகதி 29.09.2025 | திகதி 29.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4209 | சீட்டிழுப்பு இலக்கம் 1276 | சீட்டிழுப்பு இலக்கம் 0235 | சீட்டிழுப்பு இலக்கம் 2315 | சீட்டிழுப்பு இலக்கம் 5967 | சீட்டிழுப்பு இலக்கம் 1997 | சீட்டிழுப்பு இலக்கம் 0542 | சீட்டிழுப்பு இலக்கம் 0083 |
| ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கினம் விருச்சிகம் | ஆங்கில எழுத்து I | ஆங்கில எழுத்து I | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து F | ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கினம் மிதுனம் |
| | | | சுப்பர் இலக்கம் 25 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 10 22 53 60 | வெற்றி இலக்கங்கள் 04 22 54 55 | வெற்றி இலக்கங்கள் 5 1 3 1 | வெற்றி இலக்கங்கள் 05 24 36 57 | வெற்றி இலக்கங்கள் 1 8 6 8 1 1 | வெற்றி இலக்கங்கள் 20 29 37 80 | வெற்றி இலக்கங்கள் 6 8 1 1 | வெற்றி இலக்கங்கள் 04 06 09 23 |
| விசேட எழுத்து P | | | | | விசேட எழுத்து F | | |

# இனமோதல்களற்ற நாடாக இலங்கையை மாற்றினோம்

## அநுர ஜப்பானில் பெருமிதம்

**கொழும்பு, செப்.30**

**இலங்கை வரலாற்றில் எந்த இனமோதல்களும் தலைதூக்காத ஆண்டாக கடந்த வருடம் வரலாற்றில் பதிவாகியுள்ளது. 76 ஆண்டுகள் அரசியல் அதிகாரத்துக்குப் பின்னர், பொதுமக்களின் பணம் திருடவோ அல்லது வீணாக்கவோ செய்யாத ஓர் அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஜப்பானில் வசிக்கும் இலங்கையர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையின் அரச பொறிமுறை பழைய பழக்கங்களிலிருந்து விடுவிக்கப்படவேண்டும். அதை மாற்றுவதற்கான முதற்படியை நாங்கள் எடுத்துள்ளோம். நமது நாடு பல்வேறு மக்கள் நிறைந்த நாடு. நமது நாட்டை முன்னோக்கி நகர்த்த, மக்களிடையே ஒற்றுமையை உருவாக்கவேண்டும். நீண்டகால அரசியல் போராட்டத்தின் காரணமாக, மக்கள் பல்வேறு இனமோதல்கள் மற்றும் மத மோதல்களை உருவாக்குவதன் மூலம் ஒருவருக்கொருவர் அந்நியப்படுத்தப்பட்டனர். ஒருவருக்கொருவர் பிரிவினையையும், வெறுப்பையும் விதைக்கும் ஒரு நாடு முன்னேறமுடியாது.

எனவே, நம் நாட்டில் உள்ள கலாசார பன்முகத்தன்மை, மொழி வேறுபாடுகள் மற்றும் மதவேறுபாடுகளைப் புரிந்து கொள்ளும் ஒருமித்த கருத்தைக் கொண்ட ஒரு அரசை நாம் கட்டியெழுப்பவேண்டும். சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு இடையே மேலும் மோதல்கள் இல்லாதவகையில் நாட்டை ஆளுவதே எங்கள் அணுகுமுறையாகும். வடக்குமக்கள் போரால் மோசமாகப் பாதிக்கப்பட்டனர். இனிமேல் போர்இல்லாத வகையில் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் தேசிய ஒற்றுமையை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். வடக்கு மக்களுக்குத் தேவையான அபிவிருத்தி மற்றும் சட்டப்பாதுகாப்பு வழங்கி அனைத்து மக்களுக்கும் சம உரிமைகள் உள்ள ஒரு நாட்டையும் நாங்கள் உருவாக்கி வருகின்றோம்-என்றார். (கு-இ)

சுபிரி தன சம்பத — திகதி 29.09.2025 — தினம் திங்கட்கிழமை — வெற்றி வாரம் 0675 — ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கம் 5 0 0 6 1 2

Super Ball DLB — திகதி 29.09.2025 — தினம் திங்கட்கிழமை — சீட்டிழுப்பு வாரம் 2941 — ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கம் 14 45 68 73

சனிதா DLB — திகதி 29.09.2025 — தினம் திங்கட்கிழமை — ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கம் 13 19 27 55 — வெற்றி வாரம் 5002

லக்ன ராசி DLB — திகதி 29.09.2025 — தினம் திங்கட்கிழமை — துலாம் — வெற்றி இலக்கம் 09 20 50 51 — சீட்டிழுப்பு வாரம் 4653

KAPRUKA DLB — திகதி 29.09.2025 — தினம் திங்கட்கிழமை — ஆங்கில எழுத்து Z — சுப்பர் இலக்கம் 13 — வெற்றி இலக்கம் 10 17 31 63 — வெற்றி வாரம் 2117

அத கோடிபதி DLB — திகதி 29.09.2025 — தினம் திங்கட்கிழமை — ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கம் 15 42 49 69 — வெற்றி வாரம் 2767

JAYODA DLB — திகதி 29.09.2025 — தினம் திங்கட்கிழமை — ஆங்கில எழுத்து — வெற்றி இலக்கம் 05 17 40 63 — வெற்றி வாரம் 2165



# யாழில் இருந்து சென்ற பஸ் நுவரெலியாவில் விபத்து

நுவரெலியா, செப்.30

யாழ்ப்பாணத்தில் இருந்து நுவரெலியாவுக்குச் சுற்றுலா சென்று திரும்பிய பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி பாதுகாப்பு மண்மேட்டில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நுவரெலியா வலப்பனை பிரதான வீதியின் மஹ ஊவாப் பகுதியில் நடந்துள்ளது. இந்தவீதி செங்குத்தான சரிவைக் கொண்டுள்ளது. வீதியின் வளைவுப் பகுதியில் பல விபத்துகள் ஏற்பட்டுள்ளன. அதனால் வீதி அபிவிருத்தி அதிகார சபை செங்குத்தான சரிவில் ஒரு பாதுகாப்பு மண்மேட்டை அமைத்துள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 28 பேரை ஏற்றிக்கொண்டு நுவரெலியாவுக்குச் சென்று யாழ்ப்பாணம் திரும்பிக்கொண்டிருந்த பஸ் தடுப்பில் (பிரேக்) ஏற்பட்ட திடீர்க் கோளாறால் வீதியை விட்டு விலகி பாதுகாப்பு மண்மேடையில் மோதி நின்றுள்ளது.

இந்த விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. பஸ் சேதமடைந்துள்ளது. பாதுகாப்பு மண்மேடை காணப்பட்டதால் பெரும் அனர்த்தம் தடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# மண்மேடு சரிந்ததில் மூவர் பரிதாபச்சாவு

கேகாலை, செப்.30

கேகாலை மாவனெல்ல, மாணிக்காவப் பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 3 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். கட்டுமான வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 3 தொழிலாளர்கள்மீதே இந்த மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது. மீட்புப் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தநிலையில், மண்ணுக்குள் சிக்கிய மூவரும் உயிரிழந்த நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளனர். (எ-இ)

# தாஜுதீன் விசாரணைகளை மீள ஆரம்பிக்கக் கோரிக்கை

கொழும்பு, செப்.30

ரக்பி வீரர் வசீம் தாஜுதீனின் மரணம் தொடர்பாகப் புதிதாக மீண்டும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அவரது குடும்பத்தினர் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த தாஜுதீனின் மாமா, "நான் சம்பவ இடத்துக்குச் சென்றபோது, அவர் பயணிகள் இருக்கையில் இருந்தார். வாகனம் மிகக்குறைந்த சேதத்தை மட்டுமே சந்தித்திருந்தது. இதுபோன்ற விபத்தில் யாராவது இறந்திருக்கலாம் என்பது ஆச்சரியமாக இருந்தது" என்று தெரிவித்தார்.

இந்த விடயத்தில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் மீண்டும் விசாரணைகளை நடத்தவேண்டும் என்றும், 13 ஆண்டுகளுக்கும் மேலாக நீதி மறுக்கப்பட்டுவருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் உதய கம்மன்பில முறைப்பாடு!

கொழும்பு, செப்.30



பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில நேற்றுக்காலை இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை அளித்துள்ளார்.

ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் மாதாந்திர சம்பளத்தை கட்சி நிதிக்கு மாற்றும் நடவடிக்கை தொடர்பிலேயே அவர் முறைப்பாடளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.


முறைப்பாடு அளித்த பின்னர் ஊடகங்களுக்கு உதயகம்மன்பில தெரிவித்ததாவது-

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர கொடுப்பனவைத் தமது விருப்பப்படி செலவிட முடியாதுள்ளது. ஆளுங்கட்சியின் 159 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாதத்துக்கு 3 கோடி ரூபாவுக்கு மேல் பெற்று அதைக் கட்சி நிதியில் வரவுவைத்து அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது பொதுநிதியைத் தவறாக பயன்படுத்தும் செயலாகும். இந்த விடயம் குறித்து விசாரணை நடத்தக் கோரி இலஞ்சஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது-என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ட்ரில்லியன் ரூபா கடன்பெறத்திட்டம்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



**கொழும்பு, செப்.30**
**இலங்கைக்கு அடுத்த வருடம் 3 ட்ரில்லியன் ரூபா கடனைப் பெற எதிர்பார்த்துள்ளோம். அதற்கான ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, அங்கு வசிக்கும் இலங்கையர்களைச் சந்தித்துக் கலந்துரையாடும்போதே இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ வசிக்கும் எந்தவொரு இலங்கையரும் தனிப்பட்ட சலுகைகளை எதிர்பார்த்து தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவரவில்லை. அனைவரும் எதிர்பார்க்கும் மாற்றத்துக்காக அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-க-இ)

## துணிவற்றவர் அநுர சாடுகிறார் வீரவன்ச

கொழும்பு, செப்.30
புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். அந்த அமைப்பின் கொடியுடன் ஜெனிவாவில் போராட்டம் நடத்த இடமளிக்கவேண்டாம் என ஐ.நா.வில் கூறுவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு துணிவு என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துதுள்ளதாவது-
வடக்கிலுள்ள இராணுவமுகாம்கள் அனைத்தும் அகற்றப்படும் என ஜப்பானுக்குச் சென்று ஜனாதிபதி கூறுகின்றார். படைமுகாம்கள் அகற்றப்படும்வரை அவருக்கு நித்திரை வராதுபோல. கனடாவில் டயஸ்போராக்களால் நிர்மாணிக்கப்பட்ட நினைவகத்துக்கு எதிராக தனது ஐ.நா. உரையில் ஒரு வசனத்தைக்கூட ஜனாதிபதி குறிப்பிடவில்லை-என்றார். (எ-44)

## இலகு வற் வரித்திட்டத்தை நிறுத்தினால் கடும் விளைவு

கொழும்பு,செப்.30
எளிதாக்கப்பட்ட பெறுமதிசேர் வரித்திட்டத்தை இரத்துச்செய்யும் அரசாங்கத்தின் தீர்மானம் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று இலங்கை இறப்பர் வர்த்தகர் குழு தெரிவித்துள்ளது. எளிதாக்கப்பட்ட பெறுமதிசேர் வரித்திட்டத்தை, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் இரத்துச்செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. செயற்பாட்டு நிதியை மீளப்பெறும் வழிமுறை இன்றி, எளிதாக்கப்பட்ட பெறுமதிசேர் வரித்திட்டத்தை இரத்துச்செய்வதன்மூலம், இறப்பர் தொழிற்றுறை பரவலான நிதி நெருக்கடியை எதிர்கொள்ளும் என்றும் அந்தக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (எ-க-இ)



## ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, செப்.30
2025 முதல் 2026 வரையான நிதியாண்டின் முதல்5 மாதங்களில்ஸ்ரீலங்கன் விமானசேவை நிறுவனத்தின் வருமானம் 10 வீதத்தால் அதிகரித்துள்ளது. விமானங்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையும் 22 வீதத்தால் அதிகரித்துள்ளது என்று ஸ்ரீலங்கன் விமானசேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.
வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் விமானசேவையின் செயல் திறன் 74 வீதமாக அதிகரித்துள்ளது. கடந்த வருடம் இது 69 வீதமாக பதிவாகியிருந்தது. (எ-25-இ)

## அதிக விலையில் அரிசி; 105 கடைகளில் சோதனை

கொழும்பு, செப்.30
கடந்த இரண்டு வாரங்களில் கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலைக்கு அரிசி விற்பனைசெய்த 105 வர்த்தக நிலையங்களில் சோதனை நடத்தப்பட்டுள்ளது என்றும், அதிக விலைக்கு அரிசி விற்பனைசெய்த வர்த்தக நிலையங்கள்மீது வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.
தனியான வர்த்தகர் அதிக விலைக்கு அரிசி விற்று, அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அவருக்கு ஒரு இலட்சம் ரூபா முதல் 5 இலட்சம் ரூபாவரை அபராதம் அல்லது 5 மாதங்கள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்று அதிகாரசபை எச்சரித்துள்ளது. ஒரு தனியார் நிறுவனம் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் நீதிமன்றம் 5 இலட்சம் ரூபா முதல் 50 இலட்சம் ரூபா வரை அபராதம் விதிக்கலாம், அபராதம் அல்லது சிறைத் தண்டனை அல்லது மேற்கூறிய இரண்டும் விதிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)




## அதுவேறவாய், இது நாறவாய்

'அதுவேறவாய், இது நாறவாய்' எண்ட கதைமாதிரி, எலக்சன் நேரத்தில 'மக்களின்ர விருப்பப்படிதான் எல்லாம் நடக்கும்.அதுதான் மக்களாட்சி. இப்பிடிச் சனம் எதிர்க்கிற காற்றாலைத் திட்டத்தை நான் நிப்பாட்டுவன்' எண்டெல்லாம் மன்னாரில வாய்கிழியக் கதைச்ச அநுரகுமார, இப்ப பதவிக்கதிரையில குந்தினவுடன அப்பிடியே தலைகீழாக் கதைக்கிறார். கதைக்கிறதோட நிக்காமல், சனத்தை அடிச்சுக் கலைச்சுப் போட்டெண்டாலும் மன்னாரில காற்றாலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவன் எண்டு அடம்பிடிக்கிறாராம். அப்பிடி அவர் மாறினதுக்குப் பின்னால சில காரணங்கள் இருக்கு.

முதல்ல இந்தக் காற்றாலைத்திட்டத்தைச் செய்யிறதுக்கு இந்தியாவின்ர அதானி நிறுவனம்தான் வந்தது. திசைகாட்டிக்காரருக்கு இந்தியா எண்டாலே அலேர்ஜி தானே.அதாலதான் சனத்தைச் சாட்டி, 'காற்றாலைத் திட்டத்தைச் செய்யிறதுக்கு அதானின்ர காலடி இஞ்ச படவிடமாட்டம்' எண்டு சொல்லி, அந்தத் திட்டத்தை அதானி செய்யவிடாமல் பண்ணினவை. ஆனால் அதுக்குப்பிறகு கட்சியளில கனக்க மாற்றம். உந்தக் காற்றாலைத் திட்டத்தை அதானி குழுமம் கைவிட்டதால, அதை இப்ப கையில எடுத்திருகிறது இலங்கையின்ர அதானி எண்டு சொல்லுப்படுற தம்மிக்கப்பெனரோதான். காற்றாலைத்திட்டத்தைச் செய்யப்போற தம்மிக்கவின்ர கொம்பனிக்கு, சனத்தின்ர நன்மையைவிடக் காசு உழைக்கிறதுதான் முக்கியம். இவரின்ர கொம்பனிதான் 2013ஆம் ஆண்டு ரத்துப்பஸ்வெல எண்ட இடத்தில நிலத்தடித் தண்ணியை மாசுபடுத்தி, உறிஞ்சி எடுத்தது. அதுக்கு எதிர்ப்புத் தெரிவிச்ச சனத்தை அரசாங்கத்தின்ர உதவியோட அடக்க வெளிக்கிட்டவை. அதுசரிவராமல் போக கடைசியா போராடின சனத்துக்கு ஆமியைக் கொண்டந்து சுட்டு மூண்டுபேரைக் சாக்காட்டவும் செய்தவை. அப்பிட்டிப் பட்ட தம்மிக்கவின்ர கொம்பனிக்குத்தான் இப்ப மன்னார் காற்றாலைத்திட்டமும் குடுபட்டிருக்கு.

இந்தத் தம்மிக்கவைத்தான் மொட்டுக்கட்சியின்ர ஜனாதிபதி வேட்பாளராப் போடுறதா இருந்து. பிறகு அவர் நிலைமை தனக்குச் சாதகமா இல்லையெண்டதை விளங்கி விலகிட்டார். அப்பிடி மஹிந்த கும்பலுக்கு நல்லா நெருக்கமான தம்மிக்கவின்ர கொம்பனிக்கு எப்பிடிக் காற்றாலைத்திட்டம் போனது? அங்கதான் நிக்கிறார் திசைகாட்டியின்ர மின்சக்தி அமைச்சர். அவரும் தம்மிக்கவும் முந்தியே நல்ல ஐக்கியமாம். அவர்தான் 'ரெண்டர்' ஒண்டும் போடாமல் அதானியின்ர கையில இருந்த காற்றாலைத்திட்டத்தை அப்பிடியே தம்மிக்கவின்ர கையில தூக்கிக்குடுத்திருக்கிறார். ஐ.நா.வில போய் நிண்டுகொண்டு 'ஊழலுக்கு எதிராப் போராடுறம்' எண்டு கதையளக்கிற அநுர. இப்பிடி 'ரெண்டர்' இல்லாமல் ஒரு பெரிய திட்டத்தை எப்பிடி தனியார் ஒருத்தருக்குத் தங்கட அரசாங்கம் குடுத்தது எண்டு சொல்லுவாரோ? இதுவும் ஊழல் மோசடிதானே. அதுவும் சனத்தை ஈவிரக்கம் பாக்காமல் கொலை செய்தெண்டாலும்கூட, தங்கட திட்டத்தைச் செய்யிற கொம்பனிட்ட இந்தக் காற்றாலைத்திட்டத்தைக் குடுத்ததை என்னெண்டு நியாயப்படுத்தமுடியும்? இப்பிடிப் பட்ட கொம்பனியிட்ட குடுத்ததாலதான் சனத்துக்கு பொலிஸை வைச்சு அடிச்சினமோ தெரியேலை.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 12 . 1948

மறைவு 28 . 09 . 2025

## கனகரத்தினம் சந்தானலட்சுமி

ஆறுகால்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சந்தானலட்சுமி அவர்கள் கடந்த (28.09.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லமுத்து தம்பதியரின் மருமகளும், கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், சந்திரமோகனதாசன் (சுவிஸ்), கிரியா (லண்டன்), சந்திரகாசன் (லண்டன்), ராகினி (கனடா), கமலகாசன் (லண்டன்), கண்ணதாசன் (இலங்கை), றமித்தா (இலங்கை - அபிவிருத்தி உத்தியோகத்தர் மாகாண விவசாய திணைக்களம் வ.மா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுதர்சினி (சுவிஸ்), பவானந்தன் (லண்டன்), கிருசாந்தினி (லண்டன்), கஜேந்திரன் (கனடா), கேதாரணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிரிஜன் (லண்டன்), பானுஜன் (லண்டன்), சர்ஷன் (லண்டன்), கர்னிகன் (கனடா), அக்ஷயா (கனடா), பகிஷனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் மங்கையகரசி, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் யோகநாதன் (பிரான்ஸ்), கலாரதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**35, லோட்டஸ் றோட்,**
**ஆறுகால் மடம்.**


(CS/59537) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 278 3088, 074 109 3942**



நெடுந்தீவுப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் பொதியிடல் தொடர்பான பயிற்சிநெறி பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது. (சு-25,9)

# கண்ணீர் காணிக்கை



தோற்றம் 09.06.1965 மறைவு 27.09.2025

எமது ஆசிரியரின் கணவர்
**திரு. சின்னத்தம்பி ராஜபாரதி**
அன்னாரின் துயரச் செய்தி கேட்டு மனம் வருந்துகிறோம். அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்**
**சிவமஹால் சில்க்ஸ்**
**யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்



அன்னை மடியில் 10 . 08 . 1945

அமலன் அடியில் 27 . 09 . 2025

## திருமதி கிருஷ்ணபிள்ளை இராசம்மா (மீனாட்சி)

அல்வாய் தெற்கு, ஓடை எழுபாவத்தையைப் பிறப்பிடமாகவும், மாலிச்சந்தி வங்களாவை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை இராசம்மா (மீனாட்சி) அவர்கள் கடந்த (27.09.2025) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் (இராமு) - மீனாட்சி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற சின்னையா கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, கந்தசாமி, பூரணம், கனகரத்தினம், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தெய்வமலர், கணேசராசா (பிரான்ஸ்), விக்னராசா (லண்டன்), காலஞ்சென்ற சண்முகராசா (ரவி), சிவானந்தராசா (சாந்தன் - கனடா), மணிமொழி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், சறோஜா, பாமினி, மஞ்சுளா, யோகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜனனி, ஆரணி, துர்க்கா, கிருஷ்ணா, ஆதீஷன், அபிகாஷ், தீபிகா, ஷரியன், சந்தூஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2025) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:**

த. சுந்தரலிங்கம் (பெறாமகன்) - 077 185 7875
யோ.மணிமொழி (நோர்வே) - 0047 4067 5795
கி.சிவானந்தராசா (சாந்தன் - கனடா) - 001 647 642 1736

(CS/30474) J-1

# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி இராஜபாரதி

மட்டுவில் தெற்கு பாரதி பவனத்தைப் பிறப்பிடமாகவும், இல 04, பென்றிக்கோஸ்ரல் ஒழுங்கை, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராஜபாரதி அவர்கள் கடந்த 27.09.2025 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - புவனேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற மாணிக்கம் சுந்தரம் மற்றும் சிவபாக்கியம் தம்பதியினரின் பாசமிகு மருமகனும், திருமதி. அகல்யா (ஆசிரிய ஆலோசகர், யாழ். கல்வி வலயம்) அவர்களின் அன்புக்கணவரும், ஆதிரா (மாணவி, யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்) அவர்களின் அன்புத் தந்தையும், புவனபாரதி (பொறியியலாளர், கனடா), கலாபாரதி (ஓய்வுநிலை ஆசிரியை), சுந்தரபாரதி (கணக்காளர்), முரளிபாரதி (கணிய அளவீட்டாளர்), சிவசுந்தரபாரதி (தாதியர், லண்டன்), விஜயபாரதி (கணக்காளர், கொழும்பு), ஜெயபாரதி (Sai Bright IT உரிமையாளர், கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரனும், மதியழகன் (கணக்காளர், கனடா), செல்வராசா (மட்டுவில்), பேராசிரியர் தேன்மொழி (ரஜரட்ட பல்கலைக்கழகம்), மதுரா (சிரேஷ்ட முகாமைத்துவ உதவியாளர், யாழ். பல்கலைக் கழகம்), நீதிராஜா (லண்டன்), ஹரிகுகன் (கொழும்பு), பிரகலா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பருத்தித்துறை) ஆகியோரின் மைத்துனரும், சுகந்தி (ஆசிரியை, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), சுஜித்தா (ஜேர்மனி), துஷ்யந்தி (சித்த மருத்துவர், மருதங்கேணி), கௌதமி (ஆசிரியை, கொழும்புத் துறை இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ரட்ணேஸ்வரன் (விரிவுரையாளர், யா/ கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி), மதன்மோகன் (ஜேர்மனி), செல்வராசா (ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), ரவிக்குமார் ஜோசப் ஆகியோரின் அன்புக்குரிய சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2025) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 9.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**இல 04, பென்றிக்கோஸ்ரல் ஒழுங்கை,**
**கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 4118) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# மக்களின் குரலைக் கேளுங்கள்

மன்னார்த் தீவின் அமைதியான கடற்கரைகள் இன்று அரசஅடக்குமுறையின் எதிரொலிகளால் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றன. அந்தக் கொந்தளிப்பின் ஒரு நிகழ்வே, நேற்றைய பொதுமுடக்கம். காற்றாலைத் திட்டத்துக்கு எதிராக அகிம்சையாகப் போராடிய மன்னார் மக்கள் மீது பொலிஸார் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல், ஒரு ஜனநாயக நாட்டில் நிகழக்கூடிய மிகமோசமான சம்பவம். இந்த வன்முறை, மன்னார் மக்களின் நியாயமான கோரிக்கைகளை அமைதியாக வெளிப்படுத்த அவர்களுக்குள்ள உரிமையை ஏற்க மறுக்கும் திசைகாட்டி அரசாங்கத்தின் பாசிச முகத்தை வெளிப்படுத்தியிருக்கிறது.

மன்னார் மக்கள் எவரும் காற்றாலை மின்சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களுக்கு எதிரானவர்கள் அல்லர்; மாறாக, தமது பாரம்பரிய வாழ்வாதாரமும், சுற்றுச்சூழலும் அழிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தின் வெளிப்பாடாகவே அவர்கள், அகிம்சை ரீதியாகப் போராடிவருகின்றனர். சுமார் 38 கிலோமீற்றர் நீளமும், 7 கிலோமீற்றர் அகலமும் கொண்ட மன்னார்த் தீவில் காற்றாலைகளை நிறுவுவதன் மூலம் பல சூழற்பாதிப்புகள் ஏற்படக்கூடிய ஏதுநிலைகள் அதிகமாக உண்டு. கடலோர மீன்பிடித் தொழில்தான் இங்குள்ள 80 சதவீதமான மக்களின் வாழ்வாதாரம். அந்த வாழ்வாதாரம் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள காற்றாலைகள் காரணமாக பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. அத்தோடு மாரிகாலத்தில் மழைநீர் வெளியேறுவதை காற்றாலைக் கட்டமைப்புகள் தடுப்பதால், கடந்த நான்கு ஆண்டுகளில் மன்னார் நகரில் வெள்ளப்பெருக்கு அசாதாரணமாக அதிகரித்துள்ளது. எனவே எதிர்காலத்தில் தங்கள்நிலத்தை காற்றாலைகளின் வருகையால் கடல்கொண்டுபோய்விடுமோ என்ற அச்சம் மன்னார் மக்களிடையே தொற்றியுள்ளது. பாரம்பரிய மீன்பிடி முறைகள் கடல்வள மீள்தன்மையைப் பேணுவதாக அவர்கள் நம்புகிறார்கள், அதனால்தான் கனரக இயந்திர மீன்பிடிக்கு எதிராக மன்னார் மக்கள் தொடர்ச்சியாகப் போராடியுள்ளனர். இந்தநிலையில் காற்றாலைகள் இந்தப் பாரம்பரிய மீன்பிடித்தொழிலை ஆட்டங்காணச் செய்தால், அவர்களை வாழவிடாமல் செய்தால், எப்படி அவர்கள் வாளாவிருக்கமுடியும்? எனவேதான் அவர்கள் காற்றாலைகளுக்கு எதிராகப் போராடத்தொடங்கினர்.

ஆனால் இந்தப் போராட்டங்களுக்கு மதச்சாயத்தைப் பூசி, அதனைநீர்த்துப்போகச்செய்யும்கைங்கரியத்தையும் அரசதரப்பு செய்யத் தவறவில்லை. மன்னார் மக்களின் காற்றாலைகளுக்கு எதிரான போராட்டத்தில் கத்தோலிக்க மதகுருக்கள் முன்னிலை வகிப்பதை மதவாதம் என்று குறிப்பிடமுடியாது. ஏனெனில் தற்போது மன்னார்த் தீவில் வாழும் மக்களில் பெரும்பான்மையானோர் கிறிஸ்தவர்கள். எனவேதான் அந்தப் போராட்டங்களில் கிறிஸ்தவ மதகுருக்கள் பங்குகொள்கின்றனர். மக்களின் வாழ்வாதாரப் போராட்டங்களில் மதத் தலைவர்கள் பங்குகொள்வதுவும், வழிகாட்டுவதும் இயற்கையானது. எனவே ஒரு மதப் பிரச்சினை அல்ல; இது வாழ்வாதாரப் பிரச்சினை என்ற தெளிவு எல்லோருக்கும் இருக்கவேண்டும்.

மன்னார் மக்களின் கவலைகளை தேசியமக்கள் சக்தி அரசாங்கம் கேட்கவேண்டும். மக்களின் அரசு என்று மார்தட்டிக்கொள்ளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மன்னார் மக்களின் விருப்பத்தை அறிந்து, அதற்கேற்ப இந்தத் திட்டத்தை பொருத்தமான வழிமுறையில், பொருத்தமான வேறு இடங்களில் நடைமுறைப்படுத்தலாமே? ஏன் மன்னார்த்தீவில்தான் காற்றாலை அமைப்போம் என்று இலங்கை அரசு இவ்வளவுதூரம் பிடிவாதமாக நிற்கும் மர்மம் எவருக்கும் புரியவில்லை. மக்களின் நியாயமான கோரிக்கைகளைக் கேட்பதும், சூழல் பாதிப்புகளைக் கணக்கில் எடுப்பதும், அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதும்தான் ஜனநாயக அரசாங்கமொன்றின் அடிப்படைக் கடமை. மாறாக மன்னார் மக்களின் குரலை முடக்க முயல்வது என்பது ஜனநாயகத்துக்கு ஒவ்வாத செயல். இனிமேலாவது தனது சர்வாதிகாரப் போக்கை விடுத்து, மக்களின் அரசாக திசைகாட்டியினர் செயற்படுவார்களா?

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

கல்வியின் பயன் எதையும் கோபப்படாமலும், தன்னம்பிக்கையை இழக்காமலும் செவிசாய்க்கும் திறன்

– ராபர்ட் பிராஸ்ட் –



# வரவு–செலவுத்திட்டத்தில் புதிய வரிகள் இல்லை



கொழும்பு, செப்.30

எதிர்வரும் வரவு -செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, அங்குள்ள இலங்கையர்களைச் சந்தித்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரத்தில் வளர்ச்சி இலக்குகளை அடைவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு. எதிர்காலத்தில் சில வரி விகிதங்களைக் குறைப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படவுள்ளது- என்றார். (எ-இ)

## ஆள்சேர்ப்பு

கொழும்பு, செப்.30

இலங்கை பொலிஸ், பொலிஸ் மருத்துவ சேவைப் பிரிவில் உள்ள 25 வெற்றிடங்களை நிரப்ப, பொது மற்றும் தனியார் துறைகளில் உள்ள தகுதிவாய்ந்த மருத்துவ நிபுணர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச வர்த்தமானி இலக்கம் 2456 இல் இது தொர்பான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்காக எதிர்வரும் 27ஆம் திகதிவரை விண்ணப்பிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)


## தகவலாளியை கைதுசெய்ய தீவிர விசாரணை

கொழும்பு, செப்.30

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவர்களைக் கைது செய்வதற்காக பொலிஸ் குழு இந்தோனேசியாவுக்குச் சென்றதை, பாதாள உலகக் குழுக்களுக்குத் தெரியப்படுத்திய பொலிஸ் அதிகாரியைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தகவல் கிடைத்ததும் கெஹல் பத்தர பத்மே உள்ளிட்ட கும்பல் தாம் தங்கியிருந்த குடியிருப்பைக் கைவிட்டு வேறொரு இடத்துக்குத் தப்பிச்சென்றிருந்தது. பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அந்தக்குழு அங்கு வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளது. (எ-இ)



## ஒருநாள் அடையாளப் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, செப்.30

அரச பல்கலைக்கழகங்களில் இன்று ஒருநாள் அடையாளப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. வேதன முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக் கப்படவுள்ளது என்று அந்தச் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# மேல்மாகாண மாணவர் பலர் போதைப்பொருளுக்கு அடிமை

கொழும்பு, செப்.30

மேல் மாகாணத்தில் உள்ள மாணவர்கள் அதிகளவில் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர் என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது. பாடசாலைகளில் போதைப்பொருள் தடுப்புக் கொள்கைகள் செயற்படுத்தப்படாமை, பாடசாலைகளில் போதைப்பொருள் தடுப்புக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வம் காட்டாதமை என்பன மாணவர்களின் போதைப்பொருள் பாவனைக்கு வழிவகுத்த காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையாவதைத் தடுக்க, ஆபத்தான மருந்துகளைக் கட்டுப்படுத்துவதற்கான தேசியசபை ஆறு பிரிவுகள் மூலம் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனஉறுதியுடன் முடிவெடுத்து செயற்படுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சிலருக்குத் திடீர்ப் பணவரவு மகிழ்ச்சிதரும். சகோதரர்கள்வகையில் சுபச் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சிலருக்கு உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்குத் திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். நண்பர்களின்மூலம் முக்கியமான பிரச்சினை ஒன்று நல்லபடி முடிவுக்குவரும். சகோதரர்கள் உங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருப்பார்கள்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். தந்தைவழியில் திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன் யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் காரியங்களில் வெற்றியும் உண்டாகும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது. வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும்.

**சிம்மம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் அவசியம்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அவ்வப்போது குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கூடியவரை இன்று புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் யோசனையை வாழ்க்கைத்துணை ஏற்றுக்கொள்வார்

**மகரம்:** உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை முழு ஒத்துழைப்புத் தருவார். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் சற்றுக்கவனம் தேவைப்படும். சிலருக்கு அதிகரிக்கும் செலவுகளால் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாகமுடியும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றும்வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் உண்டாகும்.

# போலி இலக்கத்தகடுகள் வைத்திருந்த நபர் கைது

கொழும்பு, செப்.30

போலி வாகன இலக்கத்தகடுகள், வெடிமருந்துகள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் உள்ளிட்டவைகளை வைத்திருந்த சந்தேக நபர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மொரட்டுவை அங்குலான பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அவரிடமிருந்து, 75 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோயின், பல்வேறுவகையான 458 வெடிமருந்துகள், ஒரு ரி-56 வெடிமருந்து தோட்டா, 30 போலி வாகன இலக்கத்தகடுகள், 15 வருமான வாகன உரிமங்கள், 15 காப்பீட்டு சான்றிதழ்கள் மற்றும் இரண்டு தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேல் மாகாண தெற்குக் குற்றத்தடுப்புப்பிரிவினர் சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (எ-25-இ)

# யானையுடன் மோதி சொகுசுக் கார் விபத்து

மட்டக்களப்பு, செப்.30

காத்தான்குடியில் இருந்து பொத்துவில் நோக்கிப் பிரயாணம் செய்த சொகுசுக் கார் யானையுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்துவில் ஊறணிக் காட்டுப்பகுதியில் யானையுடன் விபத்துக்குள்ளான கார் பலத்த சேதம் அடைந்தது. அதில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் காயங்கள் எதுவுமின்றித் தப்பியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-25-இ)

# தடுப்பு மையத்திலிருந்து தப்பிச்சென்ற சிறார்கள்

கொழும்பு, செப்.30

நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்புத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மாகொல சிறுவர் தடுப்பு மையத்திலிருந்து 15 சிறுவர்கள் தப்பிச்சென்றுள்ளனர் என்று சப்புகஸ்கந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சிறுவர்கள் பல்வேறு குற்றங்களுக்காக நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் என்றும், மஹர, கொழும்பு, மாளிகாகந்த மற்றும் கடுவெல உள்ளிட்ட பல நீதிமன்றங்களில் அவர்களுக்கு எதிராக வழக்குகள் நடைபெற்றுவருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த 27ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில் அவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு அறைகளின் ஜன்னல் மற்றும் கதவை உடைத்து தப்பிச்சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# பொலநறுவையில் குரங்கால் பரவும் நோய்

கொழும்பு, செப்.30

பொலநறுவை மற்றும் கிரித்தலை ஆகிய பகுதிகளில் குரங்குகளால் சமூக நோய் ஒன்று பரவுகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நகரத்தை அண்மித்த பகுதிகளில் குரங்குகள் அதிகளவில் உலாவுவதால் மனிதர்களிடையே இந்த நோய் பரவும் அபாயம் உள்ளது என்றும், பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் வனவிலங்கு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். அதேவேளை இந்தத் தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட குரங்குகளிடம் இருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-25-இ)

# நெடுந்தீவில் வெகுவிரைவில் எரிபொருள் நிரப்புநிலையம்

## இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

புதிய எரிபொருள் நிலையத்தை நெடுந்தீவில் அமைப்பதற்கான ஒப்பந்தம் அடுத்த வாரம் அதிகாரபூர்வமாகக் கையெழுத்தாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கருணாநாதன் இளங்குமரன் தெரிவித்துள்ளார். நெடுந்தீவில் எரிபொருள் நிரப்புநிலையம் இல்லாத காரணத்தால், அந்தப்பகுதிமக்கள் குறிகாட்டுவானுக்குச் சுமார் ஒரு மணித்தியாலம் படகில் சென்று, அங்கிருந்து வேலணைக்குத் தரைவழியாகச் சென்று எரிபொருள்களைக் கொள்வனவு செய்து மீண்டும் நெடுந்தீவுக்குச் செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது. மக்களது கோரிக்கையை அடுத்து, புதிய எரிபொருள் நிலையத்தை நெடுந்தீவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-66)

# மன்னார் மக்கள் மீது பொலிஸார் வன்முறை

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

மன்னார், செப்.30

மன்னாரில் காற்றாலைக்கு எதிராகப் போராடிய அப்பாவிப் பொதுமக்கள் மற்றும் மதகுருக்கள்மீது பொலிஸார் வன்முறையைப் பிரயோகித்துள்ளனர். இதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மன்னார் மக்கள் காற்றாலையை நிரந்தரமாக அமைக்க வேண்டாம் என்றே போராடுகின்றனர். மக்கள் நடமாட்டம் இல்லாத இடங்களில் அமைக்கவேண்டும் என்பதே அவர்களது கோரிக்கை. மக்களின் உணர்வுகளைப் புரியாத அரசாங்கம் அவர்களைத் தாக்கியுள்ளது. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். பௌத்த மதகுரு மார்மீது பொலிஸார் தாக்குதல் நடத்துவார்களா? அவ்வாறு தாக்குதல் நடத்திவிட்டு அவர்களால் கடமையில் இருக்கமுடியுமா? மக்களுடைய உணர்வுகளோடு நாங்கள் சேர்ந்து நிற்கின்றோம். மக்களுடைய கோரிக்கைகள் ஈடேறுகின்ற வரைக்கும் நாங்கள் அவர்களுடன் இணைந்து இருப்போம்-என்றார். (க-27)

# தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் மரணம்

சாவகச்சேரி, செப். 30

தனன்களப்பைச் சேர்ந்த 27 வயதுடைய இளம் குடும்பஸ்தர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது. சடலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சாவகச்சேரி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (எ-25.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் மறைந்துள்ள இன்னும் பலர் விரைவில் கைது

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு,செப்.30**

**வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 72 சந்தேகநபர்களுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. 32 சந்தேகநபர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் விரைவில் கைதுசெய்யப்பட்டு நாட்டுக்குக் கொண்டுவரப்படுவர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து போதைப்பொருள் ஒழிப்புத் திட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்திய பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
ஓரிரு வாரங்களில் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பில் தேசிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

உள்நாட்டில் மாத்திரமின்றி வெளிநாடுகளிலிருந்து இலங்கையில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

20 பேர் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் விரைவில் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்.

நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்கள் தொடர்பில் எந்தவொரு பிரஜையும் தாம் அறிந்த தகவல்களை எவ்வித பயமும் இன்றிப் பொலிஸாருக்குத் தெரிவிக்க முடியும். தகவல் வழங்குபவர்களின் தனித்துவத்தன்மை பாதுகாக்கப்படும் என்றார். (எ-க-இ)



# அநுர அரசு வாய் திறந்தால் பொய் மழை

கொழும்பு, செப்.30
அநுரவின் அரசாங்கம் 24 மணி நேரமும் பொய்களைப் பரப்புகின்றது. பொய்களையே கொள்கையாகக் கொண்டிருக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விமர்சித்துள்ளார்.

அண்மைக்காலமாக போதைப்பொருள்கள் பெருமளவில் கைப்பற்றப்படுகின்றன. இது தொடர்பில் அரசால் பல்வேறு பரப்புரைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

போதைப்பொருள் காரணமாக நாடும் சீரழிந்து வருகிறது. அவற்றைக் கண்டுபிடித்து அழிப்பது சிறந்த செயலாகும். ஆனால் துறைமுகத்தில் இருந்து அனுமதியில்லாமல் கொள்கலன்களை விடுவித்த விவகாரம் தொடர்பில் அரசு மௌனமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.(எ-25-இ)

# நாமலுக்கு எதிராக விரைவில் வழக்கு

## எச்சரிக்கிறார் பிரதியமைச்சர்

கொழும்பு, செப்.30
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச எனக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய வேண்டும். இல்லையென்றால் அவருக்கு எதிராக நான் வழக்குத் தாக்கல் செய்ய நேரிடும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதியமைச்சர் சுனில் வட்டகல எச்சரித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாமல் ராஜபக்ச எனக்கு எதிராக அண்மையில் கேள்வி கோரல் பத்திரம் அனுப்பியிருந்தார். இது தொடர்பில் அவர் எனக்கு எதிராக வழக்குத் தொடரவேண்டும். இல்லையென்றால் நான் தொடருவேன்.

அதேவேளை இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், மக்கள் விடுதலை முன்னணியின் சட்டப் பிரிவில் உறுப்பினராகப் பதவி வகித்தார் என்று மக்கள் முன்னணியின் முன்னாள் உறுப்பினர் நந்தன குணதிலக கூறியிருப்பது முற்றிலும் பொய்யானது. கட்சியில் இருந்து விலகியதன் பின்னர் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிராக அவர் பேசுகிறார்.

நீதித்துறையின் சிரேஷ்டத்துவமிக்கவரான இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின்மீது, போலியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இதற்கு எதிராக அவர் சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வார்- என்றார். (க-இ)



# ஆபத்தான போதைப்பொருள் வெலிகமவில் கண்டுபிடிப்பு

ஐஸ் போதைப்பொருளைவிட ஆபத்தான புதியவகைப் போதைப்பொருள் வெலிகமப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெலிகமப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட போதைப்பொருள் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தியதன் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. வெலிகமப் பகுதியில் அண்மையில் போதைப்பொருள் உற்பத்தி நிலையம் சுற்றிவளைக்கப்பட்டு, வெளிநாட்டு இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அங்கு போதைப்பொருள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் மற்றும் உபகரணங்கள் மீட்கப்பட்டன. போதைப்பொருளின் மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காக அரசு பகுப்பாய்வாளர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டன. அரசு பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் முதற்கட்டப் பரிசோதனைகளில், ஐஸ் போதைப்பொருளை விட ஆபத்தான புதிய போதைப்பொருள் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-க-இ)

# 323 கொள்கலன்கள் விடுவிப்பு அரசாங்கத்தின் பெரும் மோசடி

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.30
சுங்கத்தில் இருந்த 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை பெரும் மோசடியாகும். இதன் உண்மையை வெளிப்படுத்த அரசாங்கம் தவறியுள்ளது. கொள்கலன்கள் விடுவிப்புத் தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு அறிக்கையை, விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் இன்றுவரை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கோப்குழு அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு முன்வைத்த பரிந்துரைகளுக்கு அமைவாக, இதுவரையில் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்கு அரசாங்கமே பொறுப்புக்கூறவேண்டும். ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் நான்கு பரிந்துரைகளும் இதுவரையில் செயற்படுத்தப்படவில்லை.

கொள்கலன்கள் விடுவிப்புத் தொடர்பில் தடயவியல் கணக்காய்வு விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான நெருக்கடியில் நாட்டுக்குத் தரமற்ற மருந்துகளும், ஆயுதங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. ஆனால் இதுவரையில் உண்மை வெளிப்படுத்தப்படவில்லை-என்றார். (எ-க-இ)



# எதிர்க்கட்சிகளின் கூச்சலால் அரசாங்கம் அச்சமடையாது!

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,செப்.30
தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களின் சொத்து விவரங்கள் எம்மால் சமர்ப்பிக்கப்பட்டவையாகும். இதற்கு எம்மால் பொறுப்புகூறமுடியும். எனவே எதிர்க்கட்சிகளின் கூச்சல்களால் நாம் அச்சமடையப் போவதில்லை என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
எமது சொத்து விபரங்களை இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் நாமாக முன்வைத்து சமர்ப்பித்துள்ளோம்.

எமது சொத்துகள் தொடர்பில் எவருக்கேனும் சந்தேகம் இருந்தால், அது குறித்து முறைப்பாடளித்தால், அதற்குப் பதிலளிப்பதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் தயாராகவே இருக்கின்றோம். சட்ட விரோதமாக சொத்துக்களைச் சேகரித்துள்ளவர்களுக்கே இது சவாலாகியுள்ளது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலுள்ளவர்கள் தமது உண்மையான சொத்து விபரங்களை முன்வைத்துள்ளமையால், கடந்த காலங்களில் ஆட்சி செய்தவர்களும் தமது உண்மையான சொத்து விவரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும். பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தால், அதனை மக்கள் இலகுவாக அறிந்துகொள்வார்கள்-என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் நகரசபை.
## மீள் கேள்வி அறிவித்தல் - 2025

மன்னார் நகரசபைக்குச் சொந்தமான கீழ்காணும் அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்களை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 30.09.2025 - 13.10.2025 திங்கட்கிழமை பி.ப 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 13.10.2025 திங்கட்கிழமை பி.ப 14.30 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 13.10.2025 திங்கட்கிழமை பி.ப 14.30 மணி

குத்தகை அட்டவணை -01 (குத்தகை காலம் 01.11..2025 - 31.12.2026)

| இல | குத்தகையின் பெயர் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத பத்திரக் கட்டணம் | சபையின் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | கீரி கடற்கரை பொழுதுபோக்கு மையம் | 10,000.00 | 1,000.00 | 112,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் தனித்தனியான உறைக்ளில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்டு "தலைவர்/செயலாளர், மன்னார் நகரசபை" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் குறித்த தினத்திற்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்படிவங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்விகோரும் சேவையின் விபரம் குறிப்பிடப்படல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகரசபையில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு மட்டுமே கேள்விப் படிவம் வழங்கப்படும். (இதனை கிராம அலுவலரின் சிபாரிசுடனும் பிரதேசசெயலாளரின் அத்தாட்சிப் பத்திரத்துடனும் சமர்ப்பித்தல் வேண்டும்). இந் நிபந்தனை 2024 இல் குத்தகை எடுத்து நடாத்தியவர்களுக்குப் பொருந்தாது. அத்துடன் தேசிய அடையாள அட்டை நிழற் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக் குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
4. கடந்த காலக் கேள்விகள் மூலம் சபைக்கு வருமதியான நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்களும், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்றத் தகுதியற்றவராவார்கள்.
5. 13.10.2025 ஆம் திகதி பிற்பகல் 14.30 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். மேலும் கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்குரியதாகும்.
6. குத்தகை அட்டவணை-01, சேவை இலக்கம் 01 இல் குறிப்பிட்ட குத்தகை நிலையத்தில் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல் முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ளது.
7. கேள்வி அறிவித்தலில் சித்தியடைந்த கேள்விதாரர்கள் கேள்வியினை நிராகரிக்கும் சந்தர்ப்பத்தில் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புத் தொகை மீள வழங்கப்படமாட்டாது.
8. சித்தியடையும் கேள்விதாரர் 1/3 பகுதி குத்தகை வைப்பினை 07 நாட்களிற்குள் செலுத்துவதோடு குத்தகைப் பணத்தினை மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.குத்தகை முடிவில் குறித்த சேவை நிலையத்திற்காக குத்தகையாளரினால் செலுத்தப்படவேண்டிய நிலுவை எதுவும் இல்லாதவிடத்து 1/3 வைப்புப் பணம் குத்தகை முடிவில் தங்களிற்கு மீளளிக்கப்படும்.

இக்கேள்விகள் சம்பந்தமாக மேலதிக விபரங்கள் தேவையாயின் மன்னார் நகரசபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது 023-2222285, 023-2222351 ஆகிய தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

அ.பீ.டே.டா.பி.வசந்தன்
தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,
மன்னார் நகரசபை.

29.09.2025

## அஸ்வெசும பயனாளிகளுக்கு உதவிகள்

பளை, செப். 30
பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் அஸ்வெசும நலன்புரித் திட்டத்தில் உதவித் தொகை பெற்ற 625 குடும்பங்கள் பிரதேச சமுர்த்தி அலகுடன் இணைக்கப்பட்டு, அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

நாட்டில் உள்ள அஸ்வெசும உதவித் தொகை பெற்ற பயனாளர்களில் 2 இலட்சம் பயனாளர்கள் இவ்வருடம் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பிரதேச செயலக ரீதியாக முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுடன் கலந்துரையாடி அவர்களின் விருப்பத்துக் கேற்ப வாழ்வாதார உதவிப் பொருள்கள் வழங்கப்படும். (எ-25, 9)

## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியின் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் நடத்தும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்க வேண்டும் என்று குருதிக்கொடை முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எ-66)

## இளங்கலைஞர் மன்றம்
சட்டநாதர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம்
### அங்கத்தவர் இணைப்பும், பொதுக் கூட்டமும் 2025

மேற்படி மன்றத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் 09.11.2025 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் கலைஞர்கள் பொதுத் துறை சார்ந்தவர்கள் வருடசந்தா, ஆயுள்சந்தாவினை செலுத்தி இணைந்து கொள்ளலாம். மேலும் அங்கத்தவராக பொதுக் கூட்டம் நடைபெறும் நாளிலும் இணையலாம்.


குறிப்பு :
1. விண்ணப்பப் படிவங்களை மன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
2. பழைய அங்கத்தவர்கள் இந்த வருட சந்தாவினை செலுத்தி இணைந்து கொள்ளலாம்.

செயலாளர்,
இளங்கலைஞர் மன்றம்
சட்டநாதர் வீதி நல்லூர்
29.09.2025

மேலதிக விபரங்களுக்கு:
021 222 5331

(CS 59533) E

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
13 • 06 • 1960

மறைவு
13 • 10 • 2021

### அமரர் திரு சண்முகம் கனகரத்தினம்

திதி: புரட்டாசி வளர்பிறை அட்டமி (30.09.2025)

ஆண்டுகள் நான்காகியும் தணியவில்லை எங்கள் வலி,
உங்கள் பாசம் இன்றும் எங்கள் இதயத்தில் தங்கியிருக்கிறது.
நீங்கள் எம்மோடு இல்லை என்றாலும்,
உங்கள் நினைவுகள் எம்மை என்றென்றும் வழிநடத்தும்.
என்றும் உம் நினைவுகளோடு ஆத்மா சாந்தியடைய
இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

செருக்கல் பிள்ளையார் வீதி
சாவகச்சேரி

தகவல்
குடும்பத்தினர்

(CS 59530) E

## மரண அறிவித்தல்

மண்ணில்
31 • 05 • 1940



விண்ணில்
25 • 09 • 2025

### செந்தில்ஞானவதி சிவலிங்கம்

**இளைப்பாறிய மருந்தாளர் (வறுத்தலைவிளான் - தற்போது கனடா)**

யாழ்.தெல்லிப்பழை வறுத்தலைவிளானை பிறப்பிடமாகவும், கனடா Scarborough Ontario. வை வசிப்பிடமாகவும் கொண்ட செந்தில்ஞானவதி சிவலிங்கம் அவர்கள் 25.09.2025 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான க.சுப்பிரமணியம் சிவஞானவதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிற்றம்பலம் சிவலிங்கம் அவர்களின் அருமை மனைவியும், ராஜினி, ரமேஷ் ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலகாந்தன்,
கோமதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிருத்திகா, தருண் ஆகியோரின் அன்பு
அம்மம்மாவும், கெவின், ரமேனா, சிவானா, சாயினா ஆகியோரின் அருமை
அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான குகஞானவதி (தவம்), குணஞானவதி குணம்), குலஞானவதி (குஞ்சு), குகஞானலிங்கம் (ராசன்) கெஜஞானவதி (பேபி) மற்றும் மகாஞானவதி (பபி) ஆகியோரின் ஆசைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், குலசிங்கம், மகாலிங்கம், ராஜசிங்கம்மற்றும் யோகம்மா, சண்பகசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான, தர்மலிங்கம் - நேசம்மா மற்றும் வீரசுப்பிரமணியம் - நாகேஸ்வரி, இராசலிங்கம் - ராசமலர் ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 01.10.2025 புதன்கிழமை முற்பகல் 08.00 AM - 11.00 AM Ajax Grematorium and viditation centre, 384 finley Ave, Ajax, on Lis 263 கனடாவில் நடைபெற்று பூதவுடல் 11.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
பெறாமகன் - டாக்டர்.கு.சுரேஷ்குமார்

(CS 59534) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தர்மமுழக்கம் கிரிக்கெட் தொடரில் தர்மபுரம் மத்திய கல்லூரி வெற்றி



கிளிநொச்சி, செப்.30

கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலய அணிக்கும் தர்மபுரம் மத்திய கல்லூரி அணிகளுக்குமிடையிலான "தர்ம முழக்கம்" கிரிக்கெட் ஆட்டத்தில் தர்மபுரம் மத்திய கல்லூரி அணி 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்தத் துடுப்பாட்டத் தொடர் கடந்த சனிக்கிழமை முழங்காவில் மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகியது. முதலாவது இனிங்ஸில் தர்மபுரம் மத்திய கல்லூரி அணி 150 ஓட்டங்களையும் முழங்காவில் மகாவித்தியாலய அணி 101 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டன. இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தர்மபுரம் மத்திய கல்லூரி அணி 64 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. 114 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தத முழங்காவில் மகாவித்தியாலய அணி 90 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. தர்மபுரம் மத்திய கல்லூரி அணி 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக தர்மபுரம் மத்திய கல்லூரி அணி வீரர் ர.தமிழ்வாணனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக முழங்காவில் மகாவித்தியாலய வீரர் ஜெ.சதாமாறனும், சிறந்த பந்து வீச்சாளராக தர்மபுரம் மத்திய கல்லூரி அணி வீரர் ஆர்.தமிழ்வாணனும், சிறந்த களத் தடுப்பாளராக முழங்காவில் மகாவித்தியாலய வீரர் எஸ்.அருட்செல்வனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதுவரை நடைபெற்ற 8 ஆட்டங்களில் 6 ஆட்டங்களில் தர்மபுரம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றுள்ளது. முழங்காவில் மகாவித்தியாலய அணி ஒரு ஆட்டத்தில் வெற்றிபெற்றுள்ளது. ஒரு ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்துள்ளது. (எ-113)

# இராமநாதபுரத்தில் யானைவேலி அமைக்கும் பணிகள் ஆராய்வு!

கிளிநொச்சி, செப்.30

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் இராமநாதபுரத்தில் காட்டுயானைகளின் தொல்லையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் யானைவேலிகளை அமைப்பதற்கான வேலைத்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதிகளில், சுமார் 5 கிலோமீற்றர் நீளமான யானைவேலிகளை அமைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், வனஜீவராசிகள் திணைக்களத்துக்கும் மக்களுக்கும் காணிப்பிரச்சினை முரண்பாடு காரணமாக பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த பகுதிக்குக் கிளிநொச்சி மாவட்டச் செயலர் தலைமையிலான குழுவினர் நேரடியாகச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர்.

காணி அனுமதிப்பத்திரம் உள்ள மக்களின் காணிகளை நில அளவைத் திணைக்களமூடாக அடையாளப்படுத்திய பின்னர் வனவளத் திணைக்களத்துடன் கலந்துரையாடி காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும், மக்களின் உறுதிக்காணிகளில் உள்வாங்காத பிரதேசம் ஊடாக யானை வேலிகளை அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.




இதை மீறுவோர்மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்நாற்றம் வீசும் குளத்தை சீரமைக்கக் கோரிக்கை

மன்னார், செப்.30

மன்னார் நகரப்பகுதியில் 10 வருடங்களுக்கு மேலாகக் கவனிப்பாரற்றுள்ள குளத்தில் கழிவுகள் குவிந்து துர்நாற்றம் எழுந்துள்ளது. அந்தக் குளத்தைப் புனரமைத்து, நகரத்தின் தூய்மையைப் பேண நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக்குளம் பாதுகாப்பற்ற இடத்தில் இருப்பதால், சமூக சீர்கேடுகளும் இடம்பெற்றுவருகின்றன. இதனால் வர்த்தகர்களும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். எனவே நகர்ப்பகுதியில் அமைந்துள்ள இந்தக் குளத்தை சீரமைக்க மன்னார் நகரசபை தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் சுகாதாரத் துறையினர் ஆகியோர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-க-213)




## விஜயதசமியன்று வித்தியாரம்பம்

கல்வித்துறையில் காலடி எடுத்துவைக்கும் சிறார்களுக்கு எழுத்தறிவிக்கும் நிகழ்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் வ. மகேஸ்வரன் ஏடுதொடக்கி வைக்கவுள்ளார். பதிவின்படி வாய்ப்பளிக்கப்படும் என்றும் முன்பதிவு செய்யமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

சேவை நலன் பாராட்டு

Best Wishes




யாழ். போதனா வைத்தியசாலையில் 33 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும், விடுதி பொறுப்பு தாதிய உத்தியோகத்தராகவும் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்

**திரு. மனுவல் சுரேஸ் நேசன்**

**(Supra Grade Nursing Officer)**

அவர்களது சேவையை பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டுகாலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**



குருதிக்கொடைக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அமரர் துரைசாமி சக்திவேலின் முதலாம் ஆண்டு நினைவாக வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கமும், வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன்புரிச்சங்கமும் இணைந்து நடத்திய குருதிக்கொடை முகாம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பலரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்கினர். (எ-41-66)

# சைவ, இளஞ்சைவப்புலவர் பெறுபேறுகள் வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.30

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்பட்ட சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பட்டத் தேர்வுகளின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன என்று அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் தெரிவித்துள்ளார். சைவப்புலவர் பட்டத் தேர்வில் கிளிநொச்சியைச் சேர்ந்த திருமதி செல்வநாயகி தெய்வேந்திரமூர்த்தி, வவுனியாவைச் சேர்ந்த திருமதி அகிலா சிறிகுமார், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி அமிர்தகலா சுதர்சன், கொழும்பைச் சேர்ந்த திருமதி ஜெயலோசனா சிவஞானசுந்தரம் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

இளஞ்சைவப்புலவர் பட்டத் தேர்வில் கல்முனையைச் சேர்ந்த குணராசா பாபு, வாழைச்சேனையைச் சேர்ந்த ராஜ்குமார் கனுஷ்சியா, மட்டக்களப்பைச் சேர்ந்த செல்வி சண்முகம் கிதுர்சனா மற்றும் ரவிக்குமார் குபேனி தர்ஷா ஆகியோர் சித்தியடைந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-25,66)

**கட்டடம் வாடகைக்கு உண்டு**

124 1/2, பலாலி வீதி, யாழ்ப்பாணம் (கந்தர்மடச் சந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில்) 2ம் மாடி கட்டடத்தொகுதி வாடகைக்கு உண்டு. இது அலுவலகம், கல்வி நிலையம் போன்றவற்றுக்கு உகந்தது.

தொடர்பு: **077 722 2602**

**காணி உடனடி விற்பனைக்குண்டு**

கலைமணி வீதி, கட்டப் பிராயில் முத்துமாரி அம்மன் கோயிலிலிருந்து 150m தூரத்தில் 1 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

தொடர்பு: **077 624 9390**
**070 669 6208**

## INVITATION FOR BID 2025/06
## VALIKAMAM SOUTH WEST PRADESHIYA SABHA MANIPAY.

1. The Chairman, Local Authority Procurement Committee, on behalf of the Valikamam South West Pradeshiya Sabha, Manipay invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway/Buildings construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents (Works specified in Table below)
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-09-30 To 2025-10-13 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam South West Pradeshiya Sabha, Manipay (T.P:021-2256647, e.mail: vswps@yahoo.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam South west Pradeshiya Sabha, Manipay on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam south west Pradeshiya Sabha, Manipay as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-09-30 To 2025-10-13 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-10-08 |
| | Closing and Opening of Bids | At 2.30 P.M on 2025-10-14 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(16)/W/CF/2025/17 | Repairing of Pandathrippu Market | 2.64 | 60 | C9 or Above (Building) | 3,500.00 | 26,500.00 | 28.12.2025 | 49 |
| NP/14/41(16)/W/CF/2025/18 | Renovation of Canteen at children Park, Annaikoddai | 2.45 | 60 | C9 or Above (Building) | 3,500.00 | 24,600.00 | 28.12.2025 | 49 |

**Chairman**
**Local Authority Procurement Committee,**
**Valikamam South west Pradeshiya Sabha,**
**Manipay.**
**30.09.2025.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நானாட்டான் டைமன் ஸ்டார் உதைபந்தாட்டத்தில் சம்பியன்


மன்னார், செப்.30

அமரர் தர்மலிங்கம் மனோன்மணி தம்பதியரின் ஞாபகார்த்த உதைபந்தாட்டத் தொடரில் நானாட்டான் டைமன் ஸ்டார் அணி சம்பியனானது.

மன்னார் பனங்கட்டுகொட்டு புனிதசூசையப்பர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை புனித சூசையப்பர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இறுதி ஆட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு சென் ஜோசப் அணியும், நானாட்டான் டைமன் ஸ்டார் அணியும் மோதின. பரபரப்பான இறுதியாட்டத்தில் நானாட்டான் டைமன் ஸ்டார் அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கியது. வெற்றிபெற்ற அணிகளுக்குப் பணப்பரிசில்களும், வெற்றிக்கேடயங்களும் வழங்கப்பட்டன.

இறுதியாட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராக கனடா புரோடல் டிரான்சிட் லைன் அண்ட் நியூ கொமர்ஸ் பினான்சியல் குழு இயக்குநர் அகஸ்ரின் சவேரியானும், கௌரவ விருந்தினர்களாக புனித செபஸ்தியார் பேராலய பங்குத்தந்தை அருட்தந்தை பி. கிறிஸ்து நாயகம் அடிகளார், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், காதர் மஸ்தான் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகரசபையின் தவிசாளர் டானியல் வசந்தன், பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-56)




# இந்தியா - இலங்கையிடையே வலுசக்தி ஒத்துழைப்பு முயற்சி

## துறைசார் அமைச்சர்கள் பேச்சு

கொழும்பு, செப். 30

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் வலுசக்தி ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பான முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி, தற்போது இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணத்தின் பிரதான அம்சமாக அவர், இந்திய வலுசக்தித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷியுடன் சந்திப்பில் ஈடுபட்டுள்ளார். இதன்போதே, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வலுசக்தி ஒத்துழைப்புத் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை ஊக்கப்படுத்தும் வகையிலான செயற்றிட்டங்கள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையில் இலங்கை ஊழியர்களுக்கான பயிற்சி வாய்ப்புகளை இந்தியாவில் வைத்து வழங்குதல் தொடர்பிலும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது. (ம-இ)

## உணவுத்...

முன்னாள் போராளிகள் உள்ளிட்டோர் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டனர். இதன்போதே, முஸ்லிம் உறவுகளும் போராட்டத்தில் தம்மையும் இணைத்துக் கொண்டனர்.

சிறுவர் தினமான நாளை, செம்மணிப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட சிறுவர் என்புத் தொகுதிகளுக்கு நீதிகோருவதுடன், இந்தப் போராட்டம் நிறைவுக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

## தவிசாளர்...

உறுப்பினர்கள் சிலர் தெரிவித்தனர். எனினும், அந்த மாற்றங்களைச் செய்வதற்கு தவிசாளர் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்தே, தவிசாளர் தன்னிச்சையாகச் செயற்படுகின்றார் என்று குற்றஞ்சாட்டி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், சுயேச்சைக் குழுவைச் (அணில்) சேர்ந்த இரண்டு உறுப்பினர்களும் என 10 பேர் வெளிநடப்புச் செய்தனர். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒன்பது பேரும், ஈ.பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த ஒருவருமாக 10 பேர் சபையில் இருந்தனர். (அ-ம-100)

## அர்ச்சுனா...

ரின் கடமைக்கு இடையூறு வழங்கிய குற்றச்சாட்டில் கொழும்பு கோட்டைப் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்துகொண்ட அர்ச்சுனா, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் நேற்று வாக்குமூலம் வழங்குவதற்காக அழைக்கப்பட்டார். இதைத் தொடர்ந்தே, அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இதன்போது அர்ச்சுனாவுக்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு ஆதரவாக, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## புலிகளின்...

கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, கடந்த காலத்தில் புலிகளின் முகாமாகச் செயற்பட்ட பகுதியிலேயே இந்தத் தேடுதல்கள் முன்னெடுக்கப்பட்டன. அண்ணளவாக ஐந்து மணிநேரம் அகழ்வு நடவடிக்கைகளும், தேடுதல்களும் முன்னெடுக்கப்பட்ட போதிலும், எவையும் மீட்கப்படவில்லை. இதையடுத்து, தேடுதல் பணிகள் கைவிடப்பட்டன. (அ-ம)

## கண்டாவளையில்...

பயன்படுத்தப்பட்ட டிப்பரொன்று நேற்று இரவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. கண்டாவளைப் பகுதியில் இருந்து அந்த டிப்பரை பொலிஸார் துரத்திச் சென்றுள்ளனர். இதன்போது, புளியம்பொக்கணைப் பகுதியில் உள்ள பாலமொன்றுக்கு அருகாக, பொலிஸார் வராதபடி வீதித்தடையை ஏற்படுத்தும் வகையில், வீதிக்குக் குறுக்காக மணலைக் கொட்டிவிட்டு டிப்பர் தப்பிக்க முற்பட்டுள்ளது. இதன்போது, வீதிக்குக் குறுக்காக இணைக்கப்பட்டிருந்த கேபிளுடன் டிப்பரின் பெட்டி அகப்பட்டு, டிப்பர் நகர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, டிப்பரின் சாரதி தப்பியோடி நிலையில், டிப்பரைப் பொலிஸார் கைப்பற்றினார்கள். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-21)

## பளை...

தப்பிச் சென்றுள்ளனர். பளை பிராந்தியத்தில் இடம்பெறும் மணற் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக, பொலிஸார் அண்மைக்காலமாக சிறப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறாக, நேற்றுமுன்தினம் இரவு மணல்கடத்தலில் ஈடுபட்ட டிப்பரொன்றை கையும் மெய்யுமாக பிடிக்க முற்பட்டபோதே, தகவலறிந்த கடத்தல்காரர்கள் மணலை வீதியில் கொட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

நாளாந்தம் வடமராட்சி கிழக்கில் இருந்து தமது கிராமத்தினூடாக மணற்கடத்தல் இடம்பெறுகின்றது என்று சோரன்பற்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். தொடர்ச்சியான நடவடிக்கைகள் மூலம் மணற் கடத்தலைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-27-66-26)

## பல்கலைக்கழக...

களை முன்வைத்து இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## காற்றாலைக்கு...

மன்னார் பிரஜைகள் குழு மற்றும் போராட்டக் குழுவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தோர் மட்டுமல்லாமல், நாடளாவிய ரீதியில் இருந்தும் நூற்றுக் கணக்கானவர்கள் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

போராட்டத்தை முன்னிட்டு, மன்னாரில் உள்ள அனேகமான வர்த்தக நிலையங்கள் நேற்றுப் பூட்டப்பட்டிருந்தன. அத்துடன், தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடவில்லை, மீனவர்களும் நேற்று முன்தினம் இரவு கடற்றொழிலுக்குச் செல்லவில்லை. இதனால், முற்றுமுழுதான சேவை முடக்கம் மன்னாரில் வெற்றிகரமாக இடம்பெற்றது.

**கண்டனப் பேரணி**

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து காலை 10 மணியளவில் கண்டனப் பேரணி ஆரம்பமானது. இந்தப் பேரணி, பொது மருத்துவமனை வீதியூடாகச் சென்று, மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை அடைந்தது.

பின்னர் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய மக்கள், காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் குறித்த பகுதியில் சிறிது நேரம் பதற்ற நிலை ஏற்பட்டது. மாவட்டச் செயலர், போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடல் நடத்தினார். இதன்போது, ஜனாதிபதியிடம் அனுப்பி வைப்பதற்கான மனுவொன்று மாவட்டச் செயலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பேரணி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகச் சென்றபோது, இரு தினங்களுக்கு முன்னர் பொதுமக்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து போராட்டக்காரர்கள் கூக்குரல் எழுப்பினார்கள். இதன்போது, பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்துக்கு கலகமடக்கும் பொலிஸார் அழைக்கப்பட்டனர்.

நிலைமை கைமீறிச் சென்றதைத் தொடர்ந்து, அவ்விடத்துக்கு விரைந்த மதத் தலைவர்கள் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதையடுத்து, நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

காற்றாலைத் திட்டம் தொடரும் பட்சத்தில், இந்தகைய போராட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். அத்துடன், காற்றாலைக்கு எதிராக இரண்டு மாதங்களுக்கும் மேலாக இடம்பெறும் வழக்கமான போராட்டம் இன்றும் தொடரவுள்ளது. (அ-ம-56)

## குளவி...

தாக்கியுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவர்களை புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் தவிசாளர் வே. கரிகாலன் நேரில் சென்று பார்வையிட்டார். (அ-எ-க-19)

## வெடித்துச்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி - தட்டுவன்கொட்டி பகுதியில் உள்ள பாழடைந்த வீடொன்றில் இருவர் நேற்று அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது, வெடிக்காத நிலையில் இருந்த குண்டொன்றை அவதானித்து, அதைக் களற்ற முற்பட்டுள்ளனர். இதையடுத்தே, அந்தக் குண்டு வெடித்துச் சிதறியுள்ளது. இந்த அசம்பாவிதத்தில் இருவரும் படுகாயமடைந்ததைத் தொடர்ந்து, அவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவின் வெளிநாட்டுப் பயணங்களால் நாட்டுக்கு எந்த நன்மையும் கிடைக்காது

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.30
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வெளிநாட்டுப் பயணங்கள் நாட்டுக்குப் பயனற்றவை. அவரது பயணங்களால் எந்த நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை. அவர் சுற்றுப்பயணங்களை மேற்கொள்கின்றார் என்றே கருதமுடிகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.
கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதுவரையில் சுமார் 8 நாடுகளுக்குப் பயணம் செய்திருக்கின்றார்.
கடந்தவாரம் அமெரிக்கா சென்றிருந்த அவர் தற்போது ஜப்பான் சென்றுள்ளார். அவரது வெளிநாட்டுப் பயணங்களால் நாட்டுக்கு என்ன நன்மை கிடைத்துள்ளது? அமெரிக்கா சென்றிருந்த ஜனாதிபதி, இலங்கை எதிர்கொண்டுள்ள பெரும் நெருக்கடியான தீர்வைவரி தொடர்பில் ட்ரம்புடன் பேச்சுகளை முன்னெடுப்பார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அமெரிக்க விஜயமும் நிறைவடைந்துள்ள நிலையில், ட்ரம்பை அவர் சந்தித்தாரா என்று எந்தவொரு தகவல்களும் வெளியாகவில்லை. ஜனாதிபதியின் ஜப்பான் பயணத்துக்கான நோக்கமும் என்ன எனத் தெரியாது-என்றார். (க-இ)

# கைவிடப்பட்ட நிலையில் பெண் சிசு மீட்பு

யாழ்., செப். 30
ஒலுவில் பிரதேசத்தில் பிறந்து சில நாள்களான பெண் சிசு ஒன்று கைவிடப்பட்டநிலையில் மீட்கப்பட்டுள்ளது.
மீன்பிடிக்கச் சென்ற ஒருவரால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய சிசு மீட்கப்பட்டு ஒலுவில் பிரதேச மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
சிசுவைப் பொலிஸாரின் ஊடாக நீதிமன்றில் பாரப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் குறிப்பிட்டுள்ளது. (எ-25-இ)

# நாட்டின் பொருளாதாரத்தை மீட்டு மக்களின் பசியைத் தீர்த்துள்ளோம்

## ஜே.வி.பி. பெருமிதம்

கொழும்பு, செப்.30
நாம் ஆட்சியைக் கைப்பற்றியதால் தான் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றமடைந்துள்ளது. மக்களின் பசியையும் தீர்த்துள்ளது என்று ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாம் ஆட்சியைக் கைப்பற்றி ஒரு வருடத்தில் மக்களின் பசியைப் போக்கி இருக்கின்றோம். பல மாற்றங்களைச் செய்துள்ளோம் .பொருள்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தியுள்ளோம் .பொருளாதாரத்தை ஒரு நிலையான நிலைக்குக் கொண்டு வந்துள்ளோம் . மக்களுக்கு அதிகளவில் நிவாரணம் வழங்கியுள்ளோம். அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சலுகைகளை வெட்டியுள்ளோம் . நாம் ஆட்சிக்கு வந்தால், பெற்றோல் வரிசை ஏற்படும். ரூபா வீழ்ச்சி அடையும். ஆறு மாதங்களுக்குள் ஆட்சி ஆட்டங்காணும் என்றெல்லாம் கூறினார்கள். அவை எதுவும் நடக்கவில்லை. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுள்ளோம்.தேர்தல் காலத்தில் நாம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிவருகின்றோம். எமது அமைச்சர்கள் திறமையானவர்கள். சுறுசுறுப்பாக வேலை செய்கின்றார்கள். பணத்தை வீண்விரயம் செய்யாமல் செலவழிக்கிறோம்.
பழைய பழக்கத்தின்படி கவனவீனமாக சில அதிகாரிகள் செயற்படுகின்றனர். அவர் தங்களை இனியாவது மாற்றிக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் மாற்றுவோம் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பணம் உழைப்பதற்காக இங்கு வரவில்லை. மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே வந்துள்ளனர். அவர்கள் சொத்துகள் வைத்திருந்தால் அது பிழை இல்லை. அதை பிழையானவழியில் ஈட்டினால் தான் பிழை. என்னிடம் எந்தச் சொத்தும் இல்லை - என்றார். (க-இ)

**வீடு வாடகைக்குத் தேவை**
கொக்குவில், குழப்பிட்டி, கோண்டாவில் தாவடி இனுவில், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை
தொடர்புகளுக்கு:
076 803 9127 / 076 931 8050

**வாகனம் வாடகைக்கு தேவை**
03 மாதத்திற்கு கன்டர் வாகனம் தேவை.
நாளாந்தம் ஓடுவதற்கும் வாகனம் தேவை.
தொடர்பு:- 077 358 3879

அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்
புதிய கல்வி ஆண்டு 2026
புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான
புதிய தரம்-06
தமிழ் மொழி மூல, English Medium
வகுப்புக்கள் ஆரம்பம்
01.10.2025 (புதன்கிழமை)
மாலை 3:30 - 5:30 வரை
அனுமதி வழங்கப்படுகிறது
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"



யானைகள், மனிதர்களிடையே முரணற்ற வாழ்வை வலியுறுத்தும் கையொப்பம் பெறும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. "உங்கள் பேராசைக்காக யானைகளைக் கொல்லாதீர்கள்" எனும் தொனிப்பொருளில் இலங்கை காட்டுயானைகள் பாதுகாப்புச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கை இன்றும் யாழ்ப்பாணத்தில் தொடரவுள்ளது. (எ-20)

# கரியபுலம் வைரவர் ஆலயத்தில் விஜயதசமிப் பெருவிழா

யாழ்ப்பாணம், செப்.30
திருநெல்வேலி அருள்மிகு கரியபுலம் ஞானவைரவர் பெருமான் ஆலயத்தில் விஜயதசமி பெருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.
விழாவில் "வித்தைகளை ஆரம்பிக்க உகந்த தினம் விஜயதசமி" எனும் விடயப்பொருளில் மதுரகவி காரை.எம்.பி. அருளானந்தம் ஆன்மிகப் பேருரையாற்றுவார். தொடர்ந்து "கன்னி வாழை வெட்டுதல் " நிகழ்வு இடம்பெறும் என ஆலய தர்மகர்த்தா விஜயமாலினி அறிவித்துள்ளார். (எ-25)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், செப்.30
வட்டுக்கோட்டை ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவில் நோயாளர் நலன்புரிக்கழகம் ஒன்றை உருவாக்குவதற்கான பொதுக்கூட்டமும், நிர்வாகத்தெரிவும் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளன. நலன்விரும்பிகள் அனைவரும் கலந்துகொண்டு மருத்துவமனையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பொறுப்பு மருத்துவ அதிகாரி கேட்டுள்ளார். (எ-25)

# டயஸ்போராக்களின் கையில் அநுர அரசு!

## சாகர கண்டுபிடிப்பு



கொழும்பு, செப்.30
டயஸ்போராக்களின் நிகழ்ச்சி நிரலையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயற்படுத்தி வருகின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் குற்றஞ்சாட்டியுள்ளார். தேசிய மக்கள் சக்தியை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு டயஸ்போராக்கள் மற்றும் வெளிநாட்டு சக்திகள் உதவி வழங்கின. இது இரகசியமான விடயம் அல்ல. இலங்கையின் கலாசாரத்தைச் சீரழிப்பது இத்தரப்புகளின் பிரதான நோக்கமாகும். ஏனெனில் கலாசாரம் சீரழிந்த நாடொன்றை அழிப்பதென்பது மிக எளிது. வெளிநாட்டுச் சக்திகள் மற்றும் டயஸ்போராக்களின் நிகழ்ச்சிநிரலுக்கமைய இந்த அரசாங்கம் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

**வேலையாட்கள் தேவை**
சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த.பழக விரும்பும் ஆண்/பெண் வேலையாள் தேவை.
(சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 076 632 3554


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.09. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org